[2008 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர் அவர்கள், ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகராட்சி, சூரம்பட்டி நகராட்சி, வீரப்பன்சத்திரம் நகராட்சி, காசிப்பாளையம் நகராட்சி போன்ற பகுதிகளிலே குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் இருக்கிறது, மேட்டூர் அணையிலிருந்து தண்ணீரைத் திறந்துவிட வேண்டுமென்று 28-3-2008 அன்று அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த இந்த முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அதற்கு முன்பே, 26-3-2008 அன்றே, குடிதண்ணீருக்காக, மாலை 6-00 மணி முதல் 600 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது. மேலும், தேவைக்கேற்ப 31-3-2008 இரவு 8-00 மணி முதல் 800 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது. இப்போது தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. நீங்கள் சொல்கிற அரசாணை, பாசனத்தோடு சேர்ந்தது. இப்போதும் திரு. சேகர் அவர்களுக்குச் சொல்கிறேன், இந்த மூன்று ஊர்களுக்கு காசிப்பாளையம், வீரப்பன்சத்திரம், சூரம்பட்டி ஆகிய பகுதிகளுக்கு இன்னும் தண்ணீர் தேவையென்றாலும், குடிநீரைப் பொறுத்தவரையில், நாங்கள் தண்ணீரைத் திறந்துவிடுவதற்குத் தயாராக இருக்கிறோம், பிரச்சினையில்லை. காரணம், உங்களுடைய வாழ்த்துகளால் இன்றைக்கு மேட்டூர் அணை ஐந்தாவது முறையாக நிரம்புகின்ற அளவிற்கு, 98 அடியை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

5. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2007-2008 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 39 முதல் 46 வரையிலான எட்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்